**கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் - 2021**

---

கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 5428-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் II(பீ)(3) ஆம் பிரிவு மற்றும் 2016 யூலை 20 ஆந் திகதிய 5800-எல்கே ஆம் இலக்க மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிதியளிப்பு உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகக் காணப்படுகின்றதுடன் கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவராகக் காணப்படுகின்றது. இலங்கையில் பங்குபற்றல் நகர பிராந்தியங்களில் தெரிவு செய்யப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவசதிகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். இச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கண்டி நகர பிராந்திய நகர்ப்புற தலையீடு, காலி நகர பிராந்திய நகர தலையீடு, யாழ்ப்பாண நகர பிராந்திய நகர்ப்புற தலையீடு மற்றும் திட்ட முகாமைத்துவம் ஆகிய செயற்திட்ட நடவடிக்கைகளின் நான்கு கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 34,912.48 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 257.08 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 27,507 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 202 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 7,405.48 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 மே 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

-------------------------------------------

### 2.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

--------------------------------

| கணக்கீட்டு குறைபாடு | தொகை<br>ரூபா. மில்லியனில் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் காலப்பகுதியினுள் பொது திறைச்சேரியினால் மேற்கொள்ளப்பட்ட சமநிலை சீராக்கல்கள் 2021 திசெம்பர் 31 வரை நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 2,650.53 | எங்கள் சீராக்கல்கள் மேற்கொள்ளப்படுவது $ கணக்குகள் மற்றும் செயற்திட்ட ரூபா கணக்கில் ஊடாகவே பொது திறைச்சேரியினால் அன்று | சீர் செய்யப்பட்ட பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| இல | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | (i) நி.பி 757 மற்றும் 760 | மீளாய்வாண்டில் நடத்தப்பட்ட சுற்றாய்வு சபை அறிக்கையின் பிரகாரம் 17 வகைக்குரிய 97 உறுப்படிகளின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. எனினும் நாட்டில் நிலவுகின்ற நிலமை தாமதத்திற்கு காரணமாகியது. | சுற்றாய்வு சபையினால் அவதானிக்கப்பட்ட குறைப்பாடுகள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| | (i) நி.பி 770 | மீளாய்வாண்டிற்குரியதாக நடத்தப்பட்ட சுற்றாய்வு சபையினால் காண்பிக்கப்பட்டுள்ள 14 வகைகளுக்குரிய 33 உறுப்படிகள் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. தற்போது இது சீர் செய்யப்பட்டுள்ளது. | அரச சட்டத் திட்டங்கள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 15 திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக செயற்திட்ட செயற்பாட்டு குழு கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டின் நிலமையே இதற்கு காரணமாகும். | செயற்திட்டத்தினால் சுற்றறிக்கை ஆலோசனை பின்பற்றப்படல் வேண்டும். |
| (இ) | பெறுகை வழிக்காட்டிகள் | | | |
| | (i) தொடர்பு 2.8.4 | தொழிநுட்ப மீளாய்வு குழுவானது நிதி பிண்ணணியை உடைய விடய நிபுணரொருவரால் பிரநிதித்துவப்படுத்தப்படல் வேண்டும். அதன் விளைவாக, காலி மாநகர சபையின் களஞ்சியம் மற்றும் அதனுடனான வசதிகளின் நிர்மாணிப்பு ஒப்பந்தக்காரரின் நிதிதிறனின் | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலமைகள் ஏற்படாதிருக்க உயர் முகாமைத்துவத்திடம் இது கொண்டுவரப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தினால் அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் வழிக்காட்டிகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பற்றாக்குறையின் காரணத்தினால் செயற்திட்டத்தின் செயன் முன்னேற்றம் குறைவாக காணப்பட்டது. | | |
| (ii) | தொடர்பு 1.2.1 மற்றும் 2.4 | மொரகா எல பிரதான கால்வாய் மற்றும் காலி விகாரை புணரமைத்தலுக்காக ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யும் போது தொழிநுட்ப மீளாய்வு குழு மற்றும் பெறுகைகள் குழுவினால் கடமையை உரிய முறையில் நிறைவேற்றப்படாமையின் காரணத்தினால் செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டத்தினால் அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் வழிக்காட்டிகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (iii) | தொடர்பு 7.9.2 (j) | ஒரே ஒப்பந்தமொன்றிற்காக ஒரே தொழிநுட்ப குழுவினால் 25 நாட்களுக்குள் (ஆரம்ப மற்றும் திருத்தப்பட்ட) பொறியியல் மதிப்பீட்டின் அடிப்படையில் தனித்தனி இரு ஒப்பந்தக்காரர்கள் பரிந்துரை செய்யப்பட்டு தனித்தனி தொழிநுட்ப மீளாய்வு குழு அறிக்கைகள் இரண்டு தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த ஏல மீளாய்வு செயன்முறை மத்திய பொறியியல் மதிப்பீடு திருத்தப்பட்டதன் பின்னர், உறுப்படிகள் உண்மைத்தன்மையற்ற தன்மை காண்பிக்கப்பட்டும், அத் தொழிநுட்ப மீளாய்வு குழு முன்னர் தோல்வியுற்ற ஒப்பந்தக்காரரினை அவ் விலைகளின் கீழ் பரிந்துரை செய்திருந்தது. | அவதானிப்பு இணங்கப்படுகின்றதெனிலும், அங்கீகரிக்கப்பட்ட குழு அங்கீகாரங்களுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தினால் அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் வழிக்காட்டிகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (iv) | தொடர்பு 3.9.1 | மென்பொருள் அபிவிருத்தி தளம் – 2021 திசெம்பர் 31 வரை பேரூந்து இயக்க முகாமைத்துவம் மற்றும் இடைநிலை பேரூந்து இயக்கத்திற்கான தகவல் தொழிநுட்ப தளத்தை உருவாக்குதல்.<br>அ) ஒப்பந்த நிபந்தணைகளின் பிரகாரம் | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | ஒப்பந்தத்திற்கு இணங்காத விடயங்கள் தொடர்பில் மத்திய மாகாண போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் பதில்கள் பெறப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | 1500 பேரூந்துகளின் முன்பக்கத்தில் (முகம்) வர்ணம் பூசுவதற்கு ரூபா 18.7 மில்லியன் விலைமனு அழைப்பதற்கு பதிலாக 02 பேரூந்துகளில் முழுமையான ஸ்டிகர்கள் ஒட்டுவதற்கும், 135 பேரூந்துகளில் பகுதியளவில் ஸ்டிகர்களை ஒட்டுவதற்கும் ரூபா 5 மில்லியனிலான ஒப்பந்தம் சுற்றறிக்கையின் அடிப்படையில் சமூகம் சார்ந்த அமைப்புக்களுக்கு வழங்கக்கூடிய போதிலும், ஏனைய தகைமைப் பெற்ற சமூகம் சார்ந்த சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஈ) திறைச்சேரி செயலாளரின் 2021 செப்தெம்பர் 29 திகதிய 01/2021 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | | | |
| i) 2.1 ஆம் பிரிவு | சமூகம் சார்ந்த அமைப்புக்களுக்கு நேரடி ஒப்பந்தம் வழங்கும் போது திணைக்க தலைவர் மற்றும் பிரதேச செயலாளரினால் பெயரிடப்படுகின்ற இரு பிரதிநிதிகளை கொண்ட மூவரிலான குழுவொன்றின் ஊடாக தகைமைகள் உறுதி செய்யப்பட்டு தகைமையுள்ள சமூகம் சார்ந்த அமைப்பொன்று தெரிவு செய்யப்படல் வேண்டும். குறித்த ஒப்பந்த கிராம அபிவிருத்தி சங்கம் அவ்வாறான குழுவொன்றினால் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | உலக வங்கியின் மற்றும் குறித்த பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்துடன் ஒப்பந்த பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டது. | ஒப்பந்தத்திற்கு இணங்காத விடயங்கள் தொடர்பில் மத்திய மாகாண போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் பதில்கள் பெறப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. 2.7 ஆம் பிரிவு | மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம், இந்த சமூகம் சார்ந்த அமைப்புக்களில் ஒப்பந்த நடவடிக்கைகள் உரிய வகையில் மேற்கொள்ளப்படுகின்றதெனவும், தேவையான தொழிநுட்ப மேற்பார்வை ஒட்டுமொத்த காலத்தினுள்ளும் மேற்கொள்ளப்படுகின்றதெனவும் திணைக்கள தலைவர், தொடர்படைய மாவட்ட செயலாளர் அல்லது பிரதேச செயலாளர் உறுதி செய்யப்படல் வேண்டும். எவ்வாறெனினும், அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விஞ்ஞாபனங்களின் பிரகாரம் இயக்க நடைமுறை காண்பிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்திற்கு இணங்காத விடயங்கள் தொடர்பில் மத்திய மாகாண போக்குவரத்து சேவைகள் அதிகார சபையின் பதில்கள் பெறப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்டததின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| **இல** | **கூறு** | **2021 திசெம்பர் 31 இல் உள்ளாறு** | | **தாமதம்/ கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** |
|---|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீகச் செயலாற்றல் சதவீதம்** | **அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம்** | | | |
| (அ) | காலி நகரத்தின் வெள்ளக் கட்டுப்பாட்டு முறைமை | 100% | பூஜ்ஜியம் | காலி நகரத்தின் 16 வெள்ளக் கட்டுப்பாட்டு வடிகாலமைப்புக்களின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் திட்டங்களின் பிரகாரம் பணிகளுக்கு தேவைப்படுகின்ற காணிகள் கையேற்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம், செயற்திட்டத்தின் செயலாற்றல் மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு இந்நிலை நேரடியாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இது தொடர்பாக அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது டன், அந்நிலையை நிவர்த்தி செய்ய எதிர்பார்க்கப்ப-டுகின்றது. | திட்டமிடப்பட்ட காலத்திற்கேற்ப செயற்திட்டத்தின் செயல்பாடுகளை நிறைவு செய்வதன் ஊடாக செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்காக உறுதியான மற்றும் வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துவ அமைப்பொன்றினை செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | மொரகொட எல பிரதான கால்வாய் மற்றும் விகாரை மாற்றுவழி புணரமைப்பு | 100% | 20% | 2017 மார்ச் 06 ஆந் திகதி ரூபா 844.9 மில்லியனிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது 2019 செப்தெம்பர் 07 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. அடிப்படை நிர்மாணிப்பு ஒப்பந்தம் 4,250 மீட்டர் நீளத்தினை நிறைவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், தற்போது அறிக்கையிடப்பட்டுள்ள 20% பலவீனமாக செயன் முன்னேற்றத்தின் காரணமாக ஒப்பந்தம் 2019 ஏப்ரல் 11 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தக்காரர் சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பு ஏற்பாடுகளை மீறியிருந்தார். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | -மேற்படி- |
| (இ) | காலி மொரகொட எல பிரதான கால்வாய் மற்றும் விகாரை மாற்றுவழி புணரமைப்பிற்கான திருத்த வேலை ஒப்பந்தம் (0+000 to 1 + 850) | 100% | 72% | (i) 4,250 மீட்டர் நீளமான மொரகொட கால்வாயின் முழுமையான ஒப்பந்த தொகை ரூபா 736.03 மில்லியனாக காணப்பட்டதுடன் 1,850 மீட்டரிலான திருத்தம் புதிய ஒப்பந்தக்காரரொருவருக்கு ரூபா 462.6 மில்லியனிற்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், கால்வாய் முழுமை அடையாமையினால் அதன் முழுமையான நலன் மக்களுக்கு பெறுவதற்கு முடியாதிருந்தது. எவ்வாறெனினும், பிரதான கால்வாயின் முழுமையான நீளத்திற்கு காணி சவீகரிப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா 397.6 மில்லியன் செலுத்தப்பட்டிருந்து. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது | -மேற்படி- |
| | | | | (ii) மொரகொட எல பிரதான கால்வாய் நிர்மாணிப்பு இயந்திரங்கள் செயல்படுத்துவதற்கு போதுமான இட வசதி இல்லாமையின் காரணத்தினால் சில பிரதேசங்களின் புணரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு | இந்த உப செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டு கையளிக்கப்பட்-டுள்ளது. | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | இயலாது போனது. ஒப்பந்தக்காரருக்கு ரூபா 112 மில்லியன் செலவில் முன்கூட்டிய பைலிங் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. உரிய மீளாய்வின்றி காணி சவீகரித்தல் மேற்படி நிலைமைக்கு பிரதான காரமணாகியதுடன், முன்கூட்டிய பைலிங் பணிகளுக்காக செயற்திட்டம் மீண்டும் வழங்கப்பட்ட வேண்டியதாயிற்று. | | |
| (ஈ) | காலி மாநகர சபை களஞ்சியம் மற்றும் அதனூடான வசதிகளின் நிர்மாணிப்பு | 100% | 90% | இந்த ஒப்பந்தம் 2019 ஏப்ரல் 24 ஆந் திகதி ரூபா 135.65 மில்லியனிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணிப்பு காலம் 270 நாட்கள் ஆகும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் ஊடாக பரிந்துரைக்கப்பட்ட 113 நாட்கள் கால நீட்டிப்பு (EOT 3) மற்றும் யதார்த்தமான திட்டத்தினை சமர்ப்பிப்பதற்காக ஒப்பந்தக்காரரிடமிருந்து பல தடவைகள் கோரப்பட்டிருந்த காலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, 2022 மே 23 ஆந் திகதி தொடக்கம் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தத. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது | -மேற்படி- |
| (உ) | யாழ்பாணம் பொண்ணாலை பருத்திதுறை (ஏபீ 21) வீதி வரை புணரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் 1+830 கி.மீ தொடக்கம் 14+600 கி.மீ | 100% | 76% | 2019 ஆகஸ்ட் 12 ஆந் திகதி ரூபா 1,220.15 மில்லியன் செலவில் நிர்மாணிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 மே 15 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மதியுரையாளரின் காலத்திற்கேற்ற மேற்பார்வை இல்லாமை தாமதத்திற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. கால நீட்டிப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், வீதியினை (கி.மீ) முழுமையாக பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது | -மேற்படி- |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கண்டி தர்மாஷொக வீதியின் 3.39 கி.மீ இனை புணரமைக்கும் மற்றும் மேம்படுத்தும் ஒப்பந்தம் 2016 யூலை 07 ஆந் திகதி ரூபா 796.42 மில்லியனிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அது 2018 யூலை 07 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பின்னர், 2019 யூன் 14 ஆந் திகதி ஒப்பந்தம் இடைநடுவே கைவிடப்பட்டிருந்ததுடன் அது வரையில் நிறைவு செய்யப்பட்டிருந்த நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 405 மில்லியன் பணம் செலுத்தப்பட்டிருந்தது. பின்னர், ரூபா 512 மில்லியன் செலவில் இரு ஒப்பந்தக்காரர்களுக்கு எஞ்சிய பணிகள் வழங்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, ஒப்பந்நதம் இடைநடுவே கைவிட்டதன் காரணத்தினால் செயற்திட்டத்திற்கு ரூபா 121.5 மில்லியன் மேலதிக செலவீனம் ஏற்க நேரிட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | நிகழ்கால செயன்முன்னேற்றத்தினை மீளாய்வு செய்ததன் பின்னர் ஒப்பந்த நடவடிக்கைகளை விரைவுப் படுத்துவதற்கு சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | உலக வங்கியினால் பெற்றுக் கொடுப்பதற்கு உடன்பட்ட 202 மில்லியன் டொலர் கடன் தொகையில், கண்டி பல்வகை போக்குவரத்து முனையம் (KMTT) நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள 65 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் 27 மில்லியன் டொலரிலான எதிர்பார்க்கப்பட்ட சேமிப்புக்கள் உள்ளடங்கலாக 92 மில்லியன் டொலர்கள் மீளாய்வாண்டிற்குட்பட்ட ஆண்டு ஈநிதியல் செயற்திட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய தவறியடையினால் 2021 திசெம்பர் 31 இல் இரத்து செய்யப்பட்டிருந்தது. அதனால் செயற்திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நலன் பெற்றுக் கொள்வதற்கு முடியாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக திட்டங்களின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாடுகள் பூர்த்தி செய்வதன் ஊடாக செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கு உறுதியான மற்றும் வினைத்திறனான உப்பந்த முகாமைத்துவ அமைப்பொன்று செயற்படுத்தப்படல் வேண்டும். |

## 3.3 பயன்படுத்தப்படாத வளங்கள

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், கடனளிக்கும் முகவர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 202 அமெரிக்க டொல்களுக்கு சமனான ரூபா 30,300 ஆன மொத்த நிதியில் 65.6 சதவீதத்தினை பிரநிதித்துவப்படுத்தும் ரூபா 14,567.64 மில்லியனிற்கு சமனான 72.14 அமெரிக்க டொலர்கள் பயன்படுத்தியிருந்தது செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 7 ½ ஆண்டுகள் கடந்த பின்னராகும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. நடைமுறையிலுள்ள சூழ்நிலைகள் அசல் நிதிகளின் குறைந்த பயன்பாட்டினை ஏற்படுத்தியது. | செயற்திட்ட செயலாற்றல் கட்டுப்பாடு மற்றும் நிதி முகாமைத்துவ கருவிகளாக செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீட்டினை மேற்பார்வை செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஊடாக 12-02-07-08-2506 (17) விடய குறிப்பின் கீழ் கண்டி, காலி கேந்திர நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 925 மில்லியன் தொகை யாழ்பாண செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அம் முழுமையான தொகையும் குறித்த பணிக்காக பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதில் அதிகளவு பின்னர் யாழ்பாண விடயத்திலிருந்து பயன்படுத்தப்பட்டது. | ஏனைய செயற்திட்டங்கள் இடையே நிதி மாற்றங்கள் மட்டுப்படுத்துவதற்கு கட்டுப்பாட்டு முறைமையொன்று செயல்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் ஊடாக விடய குறியீட்டின் கீழ் கண்டி, காலி கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 1,300 மில்லியன் யாழ்பாணம் கேந்திர நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அத் தொகையில் 51 சதவீதம் குறித்த பணிகளுக்காக பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. | இது செயற்திட்ட பணணிகளுக்கு தாக்கத்தினை ஏற்படுத்தியிராததுடன் நிதி மூலங்கள் மாற்றப்பட்டமையினால் வெவ்வேறு விடயங்களிலிருந்துமாற்றீடுகள் மேற்கொள்ளப்பட்டன. | ஏனைய செயற்திட்டங்கள் இடையே நிதி மாற்றங்கள் மட்டுப்படுத்துவதற்கு கட்டுப்பாட்டு முறைமையொன்று செயல்படுத்தப்படல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற / பயன்படுத்தப்படாத / குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| பேருந்து இயக்க முகாமைத்துவத்திற்காக தகவல் தொழிநுட்ப தளமொன்று அபிவிருத்தி செய்வதற்காக மென்பொருள் அபிவிருத்தி தளத்திற்கு தொடர்புடைய செயற்திட்ட இயக்க நிலையத்திற்கு பெறப்பட்ட 16 மடிக்கணினிகளில் 08 மடிக்கணினிகள் மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தன. எஞ்சிய ரூபா 1.2 மில்லியன் பெறுமதியான 08 கணினிகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது நடைமுறையிலுள்ள செயற்திட்டமாவதுடன் எதிர்காலத்தில் சொத்துக்கள் பயன்படுத்தப்படும். | பொருளாதார திறனின் அடிப்படைக்கு ஏற்ப செயற்திட்டத்தின் செலவினங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.5 சுற்றாடல் ரீதியான விடயங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **யாழ்பாண நகரத்தில் பாசய்யூர் பொகட் பூங்கா திட்டமிடல் - கட்டம் - 02** | | |
| | **i)** பூங்காவினை அபிவிருத்தி செய்வதற்காக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்படாது இடம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.அதன் விளைவாக, பாரம்பரியமாக மீன்பிடி தொழிலில் ஈடுப்பட்டு வந்த கிராம மக்களின் வாழ்வாதாரம் | இது அண்மைய பூங்காவொன்றாக முன்மொழியப்பட்டது. | உறுதியான சுற்றாடல் முகாமைத்துவ அமைப்பொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடக், சுற்றுலா பயணிகள் மற்றும் நலனாளிகள் தங்கள் ஓய்வு நேரத்தினை பூங்காவில் கழிக்க ஏற்ற சூழல் காணப்படாமை அவதானிக்கப்பட்டது. | | |
| **ii)** | இந்த பூங்காவினை பயன்படுத்துவோரின் பாதுகாப்பிற்காக வேலி அமைக்கப்படாதிருந்ததுடன் கழிவுகளை அகற்ற எந்த அமைப்பும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, உப்பங்கழியை சுற்றிலும் கழிவுகள் சிதறிக் கிடந்தன. இதனால் அண்மைய கரையோர சுற்றுச் சூழலுக்கு சேதம் ஏறபடுவதனை அவதானிக்க முடிந்தது. | பாதுகாப்பான கைப்பிடி சட்டகம் மற்றும் சிறிய தொட்டிகள் பொருத்தப்பட்டு சொத்துக்கள் கையளிக்கப்பட்டுள்ளது. | உறுதியான சுற்றாடல் முகாமைத்துவ தற்கோது அமைப்பொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |